DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 311/2021 PW : 1

Name : மல்லிகா Age –

W/o : வாசுதேவன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 03.09.2025.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) நான் 29 வருடமாக ரயிவே துறையில் பணிபுரிந்தேன். நான் ஓய்வு பெறும் போது சீனியர். என்னுடைய கடைசி மாத சம்பளம் 75,000/– ஆகும். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். ஒரு அரசு பணியாளர் வட்டிக்கு பணம் கொடுப்பது தவறு என்பது தெரியும் நான் பணம் கொடுப்பதற்கு நான் உயர் அதிகாரியிடம் அனுமதி எதுவும் பெறவில்லை. நான் புஷ்பாக்கு கடன் கொடுத்த விபரங்களை வருமான வரி துறையில் சமர்ப்பிக்கவில்லை. நான் அவ்வாறு எந்த வித பணம் கொடுத்தால் வருமான வரி துறைக்கு சமர்க்கவில்லை என்றாலும் என்னுடைய உயர் அதிகாரிக்கு அதை பற்றி தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தொகை கொடுக்கும் அளவிற்கு பொருளாரா வசதில்லை என்றால் சரிதான். புஷ்பா சில தொகைக்கு கால நி்ரணயம் செய்து திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளதாக எந்த வித ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 31.10.2020 அன்று ரூ.6,20,000/– கொடுத்தேன். வியாபாரம் செய்து கூடிய விரையில் திரும்ப செலுத்துவதாக என்னிடம் சொன்னார். அதன் பின் வேறு தொகையும் கொடுத்துள்ளேன. 01.11.2020 அன்று ரூ.3 லட்சம் கொடுத்துள்ளேன். அன்றைய தினம் வேறு தொகை கொடுத்துள்ளேன். 19.11.2020 அன்று ரூ.1,50,000/– லட்சம்

கொடுத்துள்ளேன். நான் தொகை செலுத்தும் போது என் மகன் வெங்கடேசன் அங்கு இருந்தா்ர.

2) 01.11.2020 அன்று 3 லட்சம் தவிர ரூ.2 லட்சம் கொடுத்துள்ளேன். 20.01.2021 அன்று நான் தொகை கொடுத்துள்ளேன். ரூ.72,000/– கொடுத்துள்ளேன். அப்போது என் மகள் சுமித்ரா இருந்தா்ர. அவரை தவிர புஷ்பாவின் அக்கா மகன் இருந்தார். அவர் பெயர் தெரியவில்லை. 06.04.2021 அன்று ரூ.2,00,000/– தொகை கொடுத்தேன். அப்போது பஞ்சாச்சரம் இருந்தா்ர. அவரி தவிர வேறு யாரும் இல்லை. 10.05.2021 அன்று ரூ.2,00,000/– கொடுத்தேன். அப்போதும் பஞ்சாச்சரம் இருந்தா்ர. தற்போது என்னிடம காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் பெயர் திருத்தல் ஆவணம் என்றால் சரிதான். ரூ.6,50,000/– கொடுக்கும் போது வா.சா.ஆ.2 ஆவணம் என்னிடம் ஒப்படைத்தா்ரகள். அந்த பத்திரம் கொடுக்கும் சமயத்தில் பஞ்சாச்சரம் தவிர வேறு யாரும் இல்லை. மேற்சொன்ன ஆவணம் புஷ்பா எந்த தேதியில் ஒப்படைத்தா்ர என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புஷ்பா வியாபாரம் செய்வதற்காக தான் சென்றார். அவர் கோயம்பேடு சென்று காய்கறி வியாபாரம் செய்வார். வழக்கில் சாட்சியாக போடப்பட்டுள்ள சாந்தியும் அவருடன் ஒன்றாக வேலை செய்து வந்தார். நான் மேற்சொன்ன தொகையை நகை வைத்தும், சீட்டு பணம் மூலமாக கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சுமா்ர 10 சரண் நகை ரூ.3,00,000/– யை கூட்டுறவு வங்கியில் அடகு வைத்தேன். தேதி சரியாக ஞாபகமில்லை. 5 பவுன் ஆராம், 3 பவுன் நெக்லஸ், வலையல் 2 பவுன் அடகு வைத்தேன்.  வங்கியின் கணக்கு எண் என் மகனிடம் தான் உள்ளது.

3) நகை அடகுவைத்ததற்கான ஆவணம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணம் தற்போது எங்கு உள்ளது எனக்கு தெரியாது. சீட்டை என்னுடன் பணிபுரிந்த நபரிடம் கட்டி வருகிறேன். அவர் பெயர் ஜெயபிரகாஷ், அவர் கும்பிடிபேட்டை ஆகும். ரூ.2,00,000/–க்கான சீட்டு ஆகும். நான் புஷ்பா பெயரில் இரண்டு சீட்டை போட்டு எடுத்து கொடுத்தேன். முதல் சீட் ரூ.55,000/– தள்ளுபோக மீதம் ரூ.1,35,000/– பணத்தை புஷ்பாவிடம்

கொடுத்தேன். நான் அந்த தொகையை கொடுக்கும் போது என் மகனும், மருமகளும் இருந்தார்கள். முதல் சீட்டை நான் 01.11.2020 முதல் 2022 வரை 20 மாதம் கட்டி வந்தேன். இரண்டாவது சீட்டை நான் 3வது மாதம் எடுத்துக்கொடுத்தேன். அதில் மொத்தம் 20 பேர் உறுப்பினர்கள். 20 யார் யார் என்ற விபரம் தெரியும். இரண்டாவது சீட் ரூ.45,000/- தள்ளுபோக மீதம் பணத்தை கொடுத்தேன். அன்றைய தினம் அந்த தொகையை நான் புஷ்பாவிடம் கொடுத்துவிட்டேன். சீட் பணம் போக என் பணம், என் மகள் பணம் அனைத்து வைத்து தான் இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன். நான் சீட் போட்டு பணம் எடுத்துக்கொடுத்தாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மல்லிகா சின்னம்மாபேட்டை என்று தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரம் நான் தான் வாங்கினேன். அது புஷ்பா தான் தட்டச்சு செய்து வந்தார். வா.சா.ஆ.2 தட்டச்சு செய்த பின்பு புஷ்பா முன்பு நான் தான் எழுதினேன். அதை 19.11.2020 அன்று எழுதினேன். அப்போது என் மகனும், மருமகளும் இருந்தார்கள். அதில் உள்ள 2வது வரியும் நான் தான் எழுதினேன். 23.11.2020 அன்று எழுதப்பட்டது. அப்போது என் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இருந்தார்கள். சாட்சி கையெழுத்து கீழ் முதல் வரி சீட்டு பணம் 2,00,000/- தேதி 01.11.2020 முதல் 01.06.2022 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை வெங்கட் என்பவர் தான் எழுதினார். எந்த தேதியில் எழுதினார் என்று ஞாபகமில்லை அதை எழுதும்போது அமுல்ராஜ், வெங்கட், புஷ்பா இருந்தார்கள். அதேபோல் இரண்டாவது வரியும் வரி சீட்டு பணம் 2,00,000/- தேதி 01.11.2020 முதல் 01.06.2022 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை வெங்கட் என்பவர் தான் எழுதினார். இரண்டு ஒரே தேதியில் தான் எழுதப்பட்டது.

4) 3வது வரியில் பணம் ரூ.3 லட்சம் 20.01.2021ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதையும் வெங்கட் தான் எழுதினார். அப்போது புஷ்பா, வெங்கட் எங்கள் குடும்பத்தினர் இருந்தார்கள். 3வது வரி எந்த தேதியில் எழுதப்பட்டது என்று ஞாபகமில்லை. 4வது வரி பணம் ரூ.22,000/- 06.04.2021 அன்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது 06.04.2021 தேதி

எழுதப்பட்டது. அப்போது வெங்கட் மற்றும் எங்கள் குடும்பத்தினர் இருந்தா்ர்கள். வெங்கட் எதே ஊரை சேர்ந்தவர். வெங்கட் என்பவர் எனக்கு நன்கு அறிமுகமானவர் என்றால் சரியல்ல. 5வது வரி பணம் ரு.20,000/- தேதி 10.05.2021 அன்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்போது புஷ்பாவின் அக்கா மகன் அங்கு இருந்தா்ர். 6, 7 8 வரிகளை வெங்கட் தான் எழுதினா்ர். தேதி எனக்கு ஞாபகமில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் திருவாலங்காடு காவல் நிலையத்தில் வைத்து பிரதிவாதிக்கு காண்பித்து கடன் பத்திரம் நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.09.03 14:10:00 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.